# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,219 — 1960 ඔක්තෝබර් 28 වැනි සිකුරාදා — 28.10.1960

12,219 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 247 | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 248 | அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | — | நானாவிதம் .. .. .. | — |


## பதவிகள்—வெற்றிடம்

### வர்த்தக பாடங்களைப் படிப்பித்தற்கான ஆசிரியர்களைத் திரட்டுதல்

பின்வரும் தராதரங்களைப் பெற்றுள்ளவர்களில் வர்த்தக பாடங்களைப் படிப்பிக்கும் ஆசிரியர்களாக நியமிக்கப்படுதற்குத் தமது பெயர்களை இக்கந்தோரில் பதிவு செய்துகொள்ள விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

(1) அங்கீகரிக்கப்பட்ட தராதரங்கள், அதாவது—

இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் அல்லது இலண்டன் வர்த்தக சம்மேளனத்தால் (London Chamber of Commerce) அளிக்கப்படும் இரண்டு உயர்தர வர்த்தக தராதரப் பத்திரங்கள்

அல்லது

இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் அளிக்கப்படும் ஒரு உயர்தர வர்த்தக தராதரப் பத்திரமும் தொழில்நுட்பக் கல்லூரியால் அல்லது இலண்டன் வர்த்தக சம்மேளனத்தால் அளிக்கப்படும் சாதாரண மாற்றுத் தராதரப் பத்திரமும். இத்தராதரப் பத்திரங்களைப் பெற்றவர்களுக்கான சம்பள விகிதம் :

ரூ. 1,560—14 × 72—2,568 (திறமைக் கடப்புப்படி)

2,640—5 × 120—3,240 வருடாந்தம்.

(2) தராதரப் பத்திரமற்ற தற்காலிக ஆசிரியர்களாக நியமிக்கப்படுதற்குப் பின்வரும் தராதரங்கள் பெற்றவர்களிடமிருந்து—

(அ) சி.பா.த. (சி.பா.த. பரீட்சையில் அல்லது க.பொ.த. பரீட்சையில் சிங்களத்தில் சித்தி பெற்றிருப்பதுடன்) பத்திரத்துடன் இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியால் அல்லது இலண்டன் வர்த்தக சம்மேளனத்தால் அளிக்கப்படும் கணக்குப் பதிவாளருக்கான அல்லது சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளருக்கான (உயர்தர அல்லது சாதாரண) வர்த்தக தராதரப் பத்திரம்

அல்லது

(ஆ) சி.பா.த. (சி.பா.த. பரீட்சையில் அல்லது க.பொ. த. பரீட்சையில் சிங்களத்தில் சித்தி பெற்றிருப்பதுடன்) பத்திரத்துடன் சி.பா.த. பரீட்சையில் அல்லது க.பொ.த. பரீட்சையில் அல்லது இலண்டன் வர்த்தக சம்மேளனப் பரீட்சையில் பின்வரும் பாடங்களில் குறைந்தபட்சம் மூன்றில் சித்தி எய்திருத்தல் வேண்டும். வர்த்தக கணிதம், வர்த்தக மூல தத்துவங்கள், கணக்குப் பதிவியல், சுருக்கெழுத்து, தட்டெழுத்து. இத்தராதரப் பத்திரங்களைப் பெற்றவர்களுக்கான சம்பள விகிதம் : ரூ. 768 வருடாந்தம்.

விண்ணப்பங்கள் கீழ்க்காணும் வடிவ முறையில் தயாரிக்கப்பட்டு 0 ம் ஆண்டு நொவெம்பர் மாதம் 15 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக இப்பகுதியின் GE கிளைக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் மேல்மூலையில் " GE—வர்த்தக ஆசிரியர்கள் " என அடையாளமிடப்பட வேண்டும்.

#### வர்த்தக ஆசிரியராகப் பதிவு செய்தற்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர் (அ) சொந்தப் பெயர் (தெளிவாக) : திரு/திருமதி/செல்வி : ————.

   (ஆ) ஏனைய பெயர்கள் : ————.

2. 1961 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ந் திகதியன்று உள்ளபடி வயது : வருடம் : ———— மாதம் : ———— நாள் : ————.

   (பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதி அனுப்பப்பட வேண்டும்.)

3. நிரந்தர தபால் விலாசம் : ————.

4. விண்ணப்பதாரரின் சாகியம் :

   இலங்கையராயின், வம்சாவழியிலா, பிரசாவுரிமைப்பதிவாகவா ? ————.

5. தற்போதைய உத்தியோகமும் அதுபற்றிய விபரங்களும் : ————.

6. மேலே குறிப்பிட்டுள்ள தராதரங்களைப் பெற்ற திகதிகள் :————. (தராதரப் பத்திரங்களின் பிரதிகள் அனுப்பப்பட வேண்டும்.)

7. நற்சாட்சிப் பத்திரங்கள் சமீபகாலத்தில் அளித்தவர்கள் இருவரின் பெயர்களும் விலாசமும். (நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் அனுப்பப்பட வேண்டும்.) : ————.

8. யாதேனும் குற்றத்துக்காக நீதி மன்றத்தில் எப்பொழுதேனும் தண்டிக்கப்பட்டிருந்தால் குற்றம் பற்றிய விபரம், திகதி ஆகியவற்றைக் குறிப்பிடவும் : ————.

என்னால் மேலே கொடுபட்டுள்ள விபரங்கள் சரியானவையென்று நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

————

திகதி : ————. விண்ணப்பதாரியின் கையொப்பம்

இதற்கு முன் இது சம்பந்தமாக விண்ணப்பித்தவர்களும் மறுகவும் விண்ணபிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

விண்ணப்பங்கள் " வித்தியாதிபதி (GE கிளை), வித்தியா பகுதி, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

எஸ். எவ். டி சில்வா,
வித்தியாதிபதி.

இல. GEB 5853,
கல்வித் திணைக்களம்,
கொழும்பு 2,
1960 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10 ந் திகதி.
10–678.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### பாவனையற்ற இருப்புப் பொருட்களை வாங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள்

பாவனையற்ற இருப்புப் பொருட்களை வாங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் 1960 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 16 ம் திகதி மு.ப. 9.30 மணி வரை கொழும்பு, மத்திய தந்திக் கந்தோர், தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மருதானை, தபாற் தந்திப் பண்டசாலையிற் கிடக்கும் பாவனையற்ற இந்த இருப்புப் பொருட்களைப் பற்றிய ஏனைய விபரங்களை, மருதானை தபாற் தந்திப் பண்டசாலை இஞ்சினியரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திர விண்ணப்பங்கள், தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியரிடமிருந்து பெற்ற பத்திரங்களில் (இரட்டைப் பிரதிகளில்) அனுப்பப்படல் வேண்டும். கொழும்பு, மத்திய தந்திக் கந்தோர், தந்திக் காசாளரிடம் அல்லது வெளியிடமாயின் அப்பகுதி தபாற்கந்தோர்த் தலைவரிடம் கேள்விப் பொறுப்புப் பணமாக ரூபா 100 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பவர்களுக்கே கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் 1960 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 15 ந் திகதி பி.ப. 4 மணிவரை வழங்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் " இருப்புப் பொருட்களை வாங்குவதற்கான கேள் விப்பத்திரங்கள் " எனக் குறிப்பிடப்பட்டும், கொழும்பு மத்திய தந்திக் கந்தோர், தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியருக்கு விலாசமிடப் பட்டதுமான உறைகளில் உள்ளடக்கப்பட்டு அவருக்கு 1960 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 16 ந் திகதி மு.ப. 9.30 மணிக்குக் கிடைக்கக்கூடிய தாக பதிவுத்தபாலில் அனுப்பப்படவேண்டும்.

கூடிய தொகைக்கு சில பொருட்களுக்கு மட்டுமே சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்களைவிடக் குறைந்த தொகைக்கு எல்லாப் பொருட் களுக்கும் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் விருப்பப்பட்டு ஆராயப் படும்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர், அவரது கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள் கேள்விப்பத்திர பெறுமதியின் முழுத் தொகையை கொழும்பு மத்திய தந்திக் கந்தோர் பிரதான தந்திக் காசாளரிடம் கட்ட வேண்டும் அல்லது தபாற் தந்தித் தலைமை அதிபதியின் பெயருக்குச் சாட்டப்பட்ட குறுக்குக் கோடிட்ட காசோலையை தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியருக்கு அனுப்புதல் வேண்டும்.

1960 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 16 ந் திகதி மு.ப. 10 மணிக்கு தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியரின் காரியாலயத்தில் கேள்விப் பத்திரம் திறக்கப்படும்போழுது கேள்விப்பத்திர கையொப்பதாரர்கள் சமூகமளிக்கவேண்டும்.

எச். ஈ. செனவிரத்தின,
தபாற் கந்தோர்த் தலைமை அதிபதி.

பிரதம தபாற் கந்தோர்,
கொழும்பு 1,
12.10.1960.

10–708.

---

## உணவுப் பகுதி

பூந்தோட்டப் பண்டசாலையில் இருக்கும் 14 லொறிகள் விற்பனை செய்வதற்கான கோரிக்கைகள் யூனியன் பிளேஸ், கொழும்பிலுள்ள வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்போக்குவரத்து அமைச்சின் கோரிக்கை சபைத் தலைவரால் 1960 ம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

1960 ம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ந் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிவரைக்கும் 330, யூனியன் பிளேஸ், கொழும்பிலுள்ள உணவு அதிகாரியிடமிருந்து பெறக்கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் (இரு பிரதிகளில்) விண்ணப்பங்கள் செய்யப்படவேண்டும். அத்துடன் இதற்குரிய கோரிக்கை நிபந்தனைகளையும் பெற்றுக்கொள்ளலாம். பிரத்தியேக விண்ணப்பப் பத்திரங்களில் அனுப்பப்படாத கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. கோரிக்கைப் பத்திரம் வழங்குமுன் உணவு அதிகாரியிடம் தங்குபணமாக ரூ. 250 கொடுத்துப் பெற்ற பற்றுச்சீட்டுக் காண்பிக்கப்படவேண்டும்.

பி. ஆர். டி. சில்வா,
உணவு அதிகாரிக்காக.

கொழும்பு, 20.10.60.
10–712.

## கமத்தொழிற் சேவைப் பகுதி

### எள்ளு விற்பனை செய்தல்

1959 ம் ஆண்டு இப் பகுதியால் சேர்க்கப்பட்ட 500 அந்தர் தொகையான எள்ளை (வன்னி) விற்பனை செய்யும் பொருட்டு கமத்தொழிற் சேவை அதிகாரி இவற்றை வாங்க விரும்பும் வியாபாரிகளிடமிருந்து விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளுவார். விண்ணப்பப் பத்திரங்கள் 1960 ம் ஆண்டு நொவம்பர் மாதம் 11 ந் திகதி பிற்பகல் 3 மணிக்கு முன்பு இப் பகுதியால் ஏற்கப்படும். இவற்றை வாங்க விரும்புவோர் கொழும்பி லிருக்கும் உத்தரவாத விலைத்திட்ட பண்டகசாலையில், தலைமை அதிகாரிக்கு விண்ணப்பஞ் செய்து பொருட்களை பார்வையிடலாம். (தெலிபோன் இலக்கம் 5216).

2. **எள்ளின் குறிப்புகள்.**—இலங்கை எள்ளு, கறுப்பு நிறம், வெள்ளை சிவப்பு நிற எள்ளுகள் கலந்தவை, நல்ல விதமான பழைய சாக்கில் அடைக்கப்பட்டுள்ளது உள்நாட்டில் மட்டுமே விற்பனை செய்யவேண்டும்.

3. விண்ணப்பஞ் செய்யும் காகித மூடியின் இடது பக்கத்தில், " எள்ளுத் தெண்டர் " என எழுதி 42, எடின்பரோ கிறெசண்ட், கொழும்பு 7 என்னும் பகுதியில் இருக்கும் தெண்டர் பெட்டியில் அல்லது கமத்தொழிற் சேவை அதிகாரி, தபாற் பெட்டி இலக்கம் 537, கொழும்பு 7, என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

4. விண்ணப்பஞ் செய்வோர், தாங்கள் குறிப்பிட்ட விலைக்கு எவ்வளவு தொகையான எள்ளை வாங்க முடியும் என்பதை விண்ணப்பப் பத்திரத்தில் தெரிவிக்கவேண்டும்.

5. வேறு விபரங்கள் வேண்டுமாயின், கமத்தொழிற் சேவை அதிகாரிதபாற் பெட்டி 579, கொழும்பு 10 என்ற விலாசத்திற்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.

க. சிற்றம்பலம்,
கமத்தொழிற் சேவை அதிகாரிக்காக.

கமத்தொழிற் சேவைப் பகுதி,
336, டீன்ஸ் ரோட், கொழும்பு,
1960 ம் ஆண்டு அக்டோபர் மீ 24 ந வ.
10–837.

---

## கடற்றொழிற் பகுதி

### ஒரு கலன் வெற்றுத் தகரங்களை விநியோகிப்பதற்காய கேள்விகள்

ஒரு கலன் கொள்ளக்கூடிய வெற்றுத் தகரங்களை விநியோகிப்பதற்காய கேள்விகள், கடற்றொழில் ஆராய்ச்சி நிலையம், காலிமுகம், கொழும்பு எனும் முகவரியிலுள்ள கடற்றொழில் அதிபரவர்களால் 1960 ம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ந் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்வு வைப்புப் பணம் ரூபா 25.

டி. ரீ. ஈ. ஏ. டீன். பொன்சேக்கா,
கடற்றொழில் அதிபர்.

கொழும்பு, 20.10.1960.
10–713.

---

## நீர்ப்பாசன இலாகா.

மாவட்ட நீர்ப்பாசன எந்திரி வ. ம. பி. அநுராதபுரம், கீழ்க்குறிக்கப் பட்டிருக்கும் வேலைகளுக்கு 1960 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 23 ம் திகதி புதன்கிழமை காலை 10 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்வார்.

(i) மாவட்ட அதிபரின் கந்தோர் மிகுதிக் கூரைவேலையும், கட்டிட வேலையும்.

(ii) மாவட்ட அதிபர் ஸ்தல 20,000 கலன் தண்ணீர்க் குதமும் அதன் தாங்கியும்.

(iii) மகாகணந்தருவைக்குளம் இடது பக்க வாய்க்கால் மூன்றும் பிரிவு 8 ம் 9 ம் 10 ம் கிளைகளிலுள்ள—நீர் வீழ்ச்சிக் கட்டுகளும், நெல்வயல் தண்ணீர்க் குழாய்க்கட்டுகளும், மற்றும் பெட்டி வடிவமான மதவுகளும்.

மேற் கூறப்பட்ட வேலைகளுக்கு நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 20,000 குறையாமல் பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் விண்ணப்பங்கள் அனுப்ப தகுதி உடையவர்கள்.

விண்ணப்பப் பத்திரம் பெற விரும்பும் ஒப்பந்தக்காரர்கள் மகாகணந்தராவ நீர்ப்பாசன எந்திரி அவர்களுடைய அலுவலகத்திலோ அல்லது கச்சேரியிலோ ரூபா 25 விண்ணப்பப்பணம் கட்டி பற்றுச்சீட்டு சமர்ப்பிக்க வேண்டும். அல்லாமலும் அவர்கள் நீர்ப்பாசன இலாகாவில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் என்பதையும் சான்று படுத்த வேண்டும். தற்சமயம் ஒப்பந்தம் ஒப்புக்கொண்டிருக்கும் ஒப்பந்தக்காரர்கள் தாங்கள் வேலை ஒப்பந்தம் செய்து கொண்டவர்களிடமிருந்து தங்கள் திருப்தி பற்றிய சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பங்கள் இரண்டு பிரதிகளில் அனுப்பவேண்டும். பத்திரங்கள் மகாகணந்தராவ எந்திரியிடம் பெற்றுக்கொள்ளலாம்; அத்துடன் சகல விபரங்களும் அவரிடம் அறியலாம். பத்திரங்கள் 31.10.60 தொடக்கம் 21.11.60 வரையும் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் 1960 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 23 ம் திகதி காலை 10 மணியளவில் பரிசீலனைக்கு எடுக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக்காரர்கள் சமுகந்தர அனுமதிக்கப் படுவார்கள்.

டி. வி. எ. சேனரத்ன,
நீர்ப்பாசன எந்திரி மகாகணந்தராவ.

மிகிந்தலை,
1960 ம் ஆண்டு ஐப்பசி மீ 20 ந வ.

10-761.

---

## நீர்ப்பாசன இலாகா

அநுராதபுரத்திலுள்ள வடமத்திய பகுதி நீர்ப்பாசன அதிபரவர்கள் 1960 ம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ம் திகதி காலை 10 மணி வரைக்கும் (i) ரூபாய் 40,000 (ii) ரூபாய் 15,000 அல்லது கூடிய தொகைக்கு மேற்படி இலாக்காவில் பதிவு செய்துள்ள பொருத்தக் காரர்களிடமிருந்து கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்வார்.

வேறுவிபரங்கள் அறிய விரும்புவோர் அநுராதபுரத்திலுள்ள உப நீர்ப்பாசன அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரம் 14.10.60 திங்கட்கிழமை 4.30 மணிவரைக்கும் வழங்கப்படும்.

### வேலைகளின் விபரம்

(i) கிறி கொள்ளாவை முவ எடகம் குளம் சீர்திருத்தங்கள் செய்வதற்கும்,

(ii) நாச்சியாதீவில் ஒரு கூலி வீடு அமைத்தல்.

10–766.

---

## பதுளை மாவட்டம் ஹேகொட—அந்தெனிய தண்ணீர் விநியோகிக்கும் திட்டம்

காணி அமைச்சுக் காரியாலயம், தபாற்பெட்டி 500, கொழும்பு, கேள்விப் பத்திர சபைத் தலைவரால் 1960 ம் ஆண்டு நொவெம்பர் மீ வெள்ளிக்கிழமை 25 ம் தேதி பி. ப. 2.30 மணி வரைக்கும் ஹேகொட—அந்தெனிய தண்ணீர் விநியோகிக்கும் திட்டத்திற்கான கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திர. சபைத் தலைவருக்கு எந்தக் கேள்விப்பத்திரத்தையும் ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ உரிமையுண்டு.

3. கேள்விப்பத்திரங்கள் அல்லது மற்றும் விபரங்கள் வதுளை மாவட்ட அரசாங்க அதிபரிடமிருந்து 18.11.60 பி. ப. 3 மணிக்கு முதல் பெற்றுக்கொள்ளலாம்.

பி. பி. வி. எ. ஜே. பி. சேனாரத்ன,
அரசாங்க அதிபர், வதுளை மாவட்டம்.

வதுளைக் கச்சேரி,
1960 ம் ஆண்டு அக்டோபர் மீ 28 ந வ.

### முழு விவரங்கள்

1. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளிலும் கேள்விப்பத்திர சபைத் தலைவர் காணிக் காரியாலயம், தபாற் பெட்டி 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

2. "பதுளை மாவட்ட ஹேகொட—அந்தெனிய தண்ணீர் விநியோகிக்கும் திட்டத்திற்கான" கேள்விப்பத்திரம், என்றசொற்கள் உறையின் இடது பக்க மேல் மூலையில் எழுதி கேள்விப்பத்திர சபைத் தலைவருக்கு 1960 ம் ஆண்டு நொவெம்பர் 25 ம் தேதி வெள்ளிக்கிழமை 2.30 மணிக்கு முதல் சேரவேண்டும். கேள்விப் பத்திரங்கள் கால்பேஸ் செக்ரெட்டேரியட் மூன்றுவது மெத்தையிலுள்ள 320 ம் இல. அறையிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் போடலாம் அல்லது தபால் மூலம் பதிவுசெய்து அனுப்பலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் 1960 ம் ஆண்டு நொவெம்பர் 25 ம் திகதி பி. ப. 2.30 மணிக்கு (வெள்ளிக்கிழமை) மேலே குறிக்கப்பட்ட இடத்தில், திறக்கப்படும். கேள்விப்பத்திரக்காரர்கள் இவ்விடத்தில் சமூகமளிக்கலாம்.

4. கேள்விப் பத்திரங்கள் வதுளை மாவட்ட அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொண்ட மாதிரிப் பத்திரத்தில் அமைந்திருத்தல் வேண்டும். எந்தக் கச்சேரியிலாவது இவ்வேலைக்கென ரூபா 50 ரொக்கப்பணம் கட்டினதாக அத்தாட்சிச் சீட்டு சமர்ப்பித்து கேள்விப் பத்திரங்களை 18.11.60 பி. ப. 3 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

5. கேள்விப்பத்திரத்திலுள்ள மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் அக்கேள்விப் பத்திரக்காரரால் கையொப்பமிட்டிருக்க வேண்டும், சொற்களில் குறிக்கப்பட்ட தொகை இலக்கத்தில் குறிக்கப்பட்ட தொகையிலிருந்து வேறுபட்டால் அல்லது சொற்களில் மாத்திரம் குறிக்கப்பட்டிருந்தால் சொற்களில் உள்ள தொகை ஏற்றுக்கொள்ளப்படும்.

6. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டு பத்து நாளைக்குள் எவராகிலும் ஒரு ஒப்பந்தத்திற்கு உள்ளாக மறுத்தால் அல்லது தவறினால் அல்லது முழு செக்ரிட்டிப் பணம் கட்டத்தவறினால் கட்டிய முன்பணம் முடிக்குரியதாகிவிடும்.

7. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட தென்ற அறிவித்தல் வெற்றிபெற்ற விண்ணப்பக்காரருக்கு பதிவுசெய்யப்பட்ட தபால்மூலம் அனுப்பப்பட்டால் அல்லது விண்ணப்பக்காரரால் கொடுக்கப்பட்ட விலாசத்தில் சேர்க்கப்பட்டால் அது அவ்விண்ணப்பக்காரரால் பெற்றுக்கொள்ளப் பட்டதென்று கருதப்படும்.

8. கேள்வி ஏற்றுக்கொண்ட பின் பிணைநிற்போர் தேவைப்பட்டால் வெற்றிபெற்ற கேள்வியாளர் அத்தேவைக்ளுக்கு இணங்கவேண்டும்.

9. வெற்றிபெற்ற கேள்வியாளர் ஒப்பந்தத்தை முறையாக முடிப்பதற்கு பிணைப்பணம் கட்ட வேண்டும். அப்பிணைப்பணம் கேள்வியின் தொகையில் ஐந்து சதவீதமாகும். ஒப்பந்தம் கைக்கூடுவதற்கு முறியில் சேர்வதற்குப் போதிய பிணைநிற்போர் இருக்கவேண்டும்.

10. மேலே குறிக்கப்பட்ட நிபந்தனைகளை கண்டிப்பாக பின்பற்றுவிட்டால் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படாமலிருக்க இடமுண்டு.

11. கேள்விகளையோ, அதன் பாகத்தையோ நிராகரிப்பதற்கு கேள்விப்பத்திர சபைக்கு அதிகாரம் உண்டு.

12. எந்த ஒப்பந்தமும் கேள்விச்சபையின் அதிகாரமில்லாமல், சாட்டவோ உபவாடகைக்கு விடவோ முடியாது. ஒரு ஒப்பந்தக்காரர் தன் சார்பாக ஒப்பந்தத்தை நடத்துவதற்கு எந்த ஒருவருக்குக் கொடுத்த தத்துவ அதிகாரத்தை கேள்வியில்லாமல் நிராகரிப்பதற்கு அரசாங்கத்திற்கு தத்துவம் உண்டு.

13. வதுளை அரசாங்க அதிபர் தனக்குப்போதுமையான காரணங்களுடன் ஒப்பந்தக்காரர் எந்த ஒரு வேலையாளர் நியமித்தலில் தனக்குள்ள ஆட்சேபனையை எழுத்துமூலம் அறிவித்தால் அந்த வேலையாளரை ஒப்பந்தக்காரர் வேலையில் அமர்த்தல் கூடாது.

14. ஒரு கேள்வியாளர் இத்திணைக்களத்துடன் ஒப்பந்தங்கள் நிறைவேற்றியிருந்தாலும் இந்த மாவட்டத்தில் ஒப்பந்தம் நிறைவேற்றியிராவிடில், எந்த மாவட்டத்தில் ஒப்பந்தம் எடுத்துள்ளார் என்று கூறவேண்டும்.

15. ஒரு கேள்வியாளர் வேறு திணைக்களத்துடன் அரசாங்க ஒப்பந்தம் எடுத்து வேலைசெய்திருந்தால் அத்திணைக்களத்தின் பெயரையும் வேலை செய்த மாவட்டத்தின் பெயரையும் குறிக்கவேண்டும்.

16. எவரெவருடைய பெயர்கள் தவறிய ஒப்பந்தக்காரர் நிரலில் இடம்பெற்றுள்ளனவோ அவர்களின் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

17. வெற்றிபெற்ற கேள்வியாளர் வதுளை அரசாங்க அதிபருடன் அல்லது திறைசேரியின் பிரதிசெயலாளருடன் ஒப்பந்தம் செய்யவேண்டும்.

18. கையொப்பமிடக் கூடிய உடன்படிக்கையிலுள்ள பின்வரும் நிபந்தனைகளுக்கு வெற்றிபெற்ற கேள்வியாளர் உடன்படவேண்டும்.

(i) இலங்கைத் தொழிலாளரைப் பாவிக்கவேண்டும்.

(ii) சேதங்கள் ஏற்பட்டால் வேலையாளர் நஷ்ட ஈட்டுக்கட்டளைச்சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினது நஷ்ட ஈடு கட்டவேண்டும்.

(iii) இலங்கை அரசாங்க சட்டங்கள் கூடியவரை பாவிக்கப்படும்.

19. வெற்றி பெற்றகேள்வியாளர் உடன்படிக்கைக்கு அல்லது ஒப்பந்தத்துக்கு முத்திரைவரி கட்டும்படி வேண்டப்படுவார்.

10–810.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது